**OS.No.322/2014 P.W.1-சம்பத்குமார் 31.08.2026**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னுடைய வருமானத்தை காட்டக்கூடிய வருமான வரி சான்றிதழோ மற்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கார்பெண்டராகவும், இன்டீரியல் டெக்ரேட்டராகவும் தொழில் செய்து வருகிறேன். இன்டீரியல் டெக்ரேட்டர் தொழிலில் யார், யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும், வரவேண்டும் என்ற வரவு, செலவு கணக்குகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பிரதிவாதி எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை பற்றி சொல்லியுள்ளேன். என்னுடைய வங்கி கணக்கு பட்டியலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

2. தேவஆசிர்வாதம் என்பவரை எனக்கு தெரியும். அவருக்கும், எனக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளது. அவர் மீது தாம்பரம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். அவர் இறந்துவிட்டார், அவரது வாரிசுகள் ஊருக்கு சென்றுவிட்டார்கள், அதனால் அந்த வழக்கை அப்படியே விட்டுவிட்டேன். தேவஆசிர்வாதத்திடம் கொடுத்த பணத்தை வாங்க முடியாததால் பிரதிவாதி மீது அவருடைய காசோலையை பெற்று நானே நிரப்பிக் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை 01.09.2026க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**